# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண். 132/2022**

பெயர் : கருணாநிதி(PW1)

த/க/பெ. :

தேதி : 03.01.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**2 மற்றும் 3 தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் முதல்வாதி மற்றும் முதல்பிரதிவாதியும் சகோதரர்கள் என்றால் சரிதான், 2,3 பிரதிவாதிகளை தெரியாது. 2,3 பிரதிவாதிகள் வசம் தாவா சொத்து உள்ளதால் அவர்களை வழக்கில் சேர்த்துள்ளேன். எவ்வளவு ஆண்டுகளாக அவர்கள் வசம் சொத்து உள்ளது என்பது தெரியவில்லை. 1ம் பிரதிவாதிவசம் சொத்து இருப்பதாக நினைத்துக்கொண்டு இருந்தேன் ஆனால்தற்போதுதான் 2,3 பிரதிவாதிகள் தரப்பில் சொத்து இருக்கிறது என்று தெரிந்துக்கொண்டேன். வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை என் தந்தைக்கு அனுப்பியதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. பொது சம்பாதித்த பணத்தைக்கொண்டு சொத்துக்கள் வாங்கப்பட்டதற்கான ஆவணம் ஏதும் இல்லை என்றால்சரிதான். கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும்தாக்கல் செய்யவில்லை என்றால் எந்த ஆவணமும் இல்லை. பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன பதில் போட்டுள்ளார்கள் என்பதை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். தற்போது நினைவு இல்லை. 10.08.2021ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால்சரிதான். அதற்கு முதல்பிரதிவாதி தனியாகவும் 2,3 பிரதிவாதிகள் தனியாகவும் பதில் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். நேர்மாறான பதில் கொடுத்துள்ளார்கள். அதில் சொத்து என்தந்தைக்கு உரிமையில்லை என்று சொல்லியுள்ளார்கள். வழக்கில் தாக்கல் செய்துள்ள கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்துள்ள ஆவணம் இன்றைய தேதியிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முந்தைய ஆவணம் என்றால் சரிதான். நில அபகரிப்பு பிரிவில்

நானும் முதல்வாதியும் புகார் கொடுத்தோம். அது தொடர்பான ஆவணம் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் கைவசம் உள்ளது. சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு புகார் கொடுத்தோம். எங்களை அழைத்து விசாரணை செய்து 3 பேருக்கம்பொதுவான சொத்து நீதிமன்றம்மூலம்பிரித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். தேவைப்பட்டால் ஆவணங்களை கொடுப்பதாக சொன்னார்கள். 16.06.2018 ல் புகார் கொடுத்தோம் என்றால்சரிதான். அந்த புகாரில் இரு தரப்பையும்அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். விசாரணையில் நாங்கள் ஆவணங்களை கொடுத்தோம் அவர்கள் கொடுத்தார்களா என்று தெரியாது. நில அபகரிப்பு சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தோம். நில அபகரிப்பு எதுவும் இல்லை என்று எங்கள் மனு முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் மனுவில்முகாந்திரம் இல்லை என்பதால்தான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்சரிதான். தாவாச்சொத்துக்கள் 15 அயிட்டமாக உள்ளது. அந்த சொத்துக்கள் நரசிங்கநத்தத்தில் உள்ளது. 15 அயிட்டம் நஞ்சை, புஞ்சை கலந்து உள்ளது. எந்தெந்த சொத்துகள் நஞ்சை புஞ்சை என்று என்னால் பிரித்து சொல்லமுடியாது. ஒவ்வொரு அயிட்டத்திற்கும் விஸ்தீரணம் நான்கெல்லைகள் சொல்ல இயலாது. தாவாச்சொத்தை பலமுறை சென்று பார்த்துள்ளேன். தாவாச்சொத்துக்கள் கூட்டுகுடும்பசொத்துக்களாக நானும் முதல்வாதியும் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாச்சொத்துக்களை எத்தனை ஆவணம்மூலம் என் தந்தை வாங்கியுள்ளார் என்பது தெரியவில்லை வழக்கிற்கு பின்பும் தெரிந்துக்கொள்ள முயற்சிக்கவில்லை. 1987 ல் என் தந்தை காலமானார். நான் 2010 ல் சவுதியில் இருந்து வந்தபிறகு முதல்பிரதிவாதியிடம் சொத்தை கேட்டேன் அதற்கு அவர் பதில் சொல்லவில்லை. 1987 ல்என்தந்தை இறந்தபிறகு 2010 ல் பாகம் கேட்டேன் என்று வழக்குரையில் சொல்லவில்லை என்றால்சரிதான். 2021 ல் வழக்கறிஞர்அறிவிப்பு மூலம் பாகம் கேட்டதாகதான் வழக்குரையில் உள்ளது என்றால் சரிதான். 2010 ல் பாகம்கேட்ட விவரத்தை மறைத்துள்ளதால் துய கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் எந்த ஏற்பாட்டின்படி தாவாச்சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்பதை தெரிந்துக்கொள்ளவில்லை. இந்த விவரத்தை பிராதில் சொல்லியுள்ளேன். பிராதில் 2,3 பிரதிவாதிகள் 1ம்பிரதிவாதியிடம்ஒப்பந்தம் ஏற்படுத்தி அதன்அடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த

ஒப்பந்தம் என்பதை சொல்லவில்லை. தற்போதும் தெரிந்துக்கொள்ளவில்லை. அது தொடர்பாக எதிர்வழக்குரையில் விவரங்களை தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் நல்ல எண்ணத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றுள்ளதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை தெரிந்துக்கொள்ளவில்லை. அதனை மறுத்து பதில்உரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**